අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

## உயர் தர தொழிற்பாடத்துறை
## (பதின்மூன்று வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டம்)
## தரம் 12 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பம் கோரல் - 2025

உயர் தர தொழிற் பாடத்துறையின் கீழ் தரம் 12 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன. 2025ம் ஆண்டு முதல் **தொழிற் பாடத்துறை நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைகளுக்கு** (உரிய பாடசாலைகளின் பெயர் பட்டியலை இதனூடாக பெற்றுக் கொள்ளவும்) **அனுமதி பெற்றுக் கொள்வதற்காக** மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும் என்பதுடன், இப் பாடத்துறைக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது **க.பொ.த சா/த பரீட்சையில் சித்தி தொடர்பில் கருத்தில் கொள்ளப்படுவதில்லை.**

தொழிற் பாடத்துறையின் கீழ், **தரம் 12 இல் பாடசாலைக் கற்றல் செயற்பாடுகளை** நிறைவு செய்து, **தரம் 13 இல்** கீழே தரப்பட்டுள்ள தொழிற் பாடங்களின் ஒன்றில் **NVQ (தேசிய தொழிற் தகைமைகள்) 04 வது மட்ட தொழிற் பயிற்சிப் பாடநெறி ஒன்றை தொடர்வதற்கு** மாணவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

1. குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு
2. சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு
3. உடற் கல்வி மற்றும் விளையாட்டு
4. அரங்கற் கலை
5. நிகழ்ச்சி முகாமை
6. கலை மற்றும் கைவினை
7. உள்ளக வடிவமைப்பு
8. நவநாகரீக வடிவமைப்பு
9. கிராஃபிக் வடிவமைப்பு
10. சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல்
11. நிலத்தோற்ற வடிவமைப்பு
12. பிரயோக தோட்டக் கலைத் தொழில்நுட்பக் கல்வி
13. கால்நடை உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி
14. உணவு உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி
15. நீர்வளத் தொழில்நுட்பக் கல்வி
16. பெருந் தோட்டப் பயிர்ச்செய்கை உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி
17. கட்டுமானத் தொழில்நுட்பக் கல்வி
18. மோட்டார் இயந்திர தொழில்நுட்பக் கல்வி
19. மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி
20. ஜவுளி மற்றம் ஆடைத் தொழில் நுட்பக் கல்வி
21. உலோகக் கட்டுமான தொழில்நுட்பக் கல்வி
22. அலுமினிய கட்டுமான தொழில்நுட்பக் கல்வி
23. கலை மற்றும் வடிவமைப்பு
24. சுற்றாடல் கல்வி
25. கணணி வன்பொருள் மற்றும் வலையமைப்பு
26. உற்பத்தி
27. விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்
28. வழங்கல்கள் முகாமைத்துவம்

**இதனுடன் உள்ள** மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய **தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் ஒன்றை தாங்கள் அனுமதி பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் பாடசாலையின் அதிபருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.**

மேலதிக தகவல்களுக்கு வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப 4.00 வரையில் 0112 787136/ 0112 786746 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாக தொடர்புகொள்ள முடியும்.

**பீ.டீ.எஸ் பாலசூரிய**
**கல்விப் பணிப்பாளர் (அனைவருக்கும் கல்விக் கிளை)**

tamilguru.lk